1975 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீண்ட பட்டியலாக இருந்தால் பின்னல் அவைமுன் வைத்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மலிவு விலையில் அரிசி தருவது என்பது தோட்டத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான முறையில் அந்தந்த மாவட்டத்தில் இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப் பேற்றுக்கொண்டு காரியம் ஆற்றுகிறார்கள் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

Wages for Handloom Weavers

* 385 *Q.*—THIRU A. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(*a*) whether a representation has been received from the Tamil Nadu State Handloom Weavers' Association in August 1974 in regard to enhancing the wages of handloom weavers; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. க. இராசாராம்:—

(அ) ஆம்.

(இ) கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் குறைந்தஅளவு ஊதியம் நிர்ணயிக்கப்படுவதற்கென அமைக்கப்பட்ட குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக் குழுவினுடைய பரிந்துரைகளின் அடிப்படையில் அரசாணை எண். 559, தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை, 26-7-74-ன் படி கைத்தறி நெசவாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்கள் அண்மையில்தான் அறிவிக்கப்பட்டதால் அவற்றை தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் சங்கத்தின் கோரிக்கையின் பேரில் இப்போழுது மாற்றி அமைப்பது உசிதமாகாதெனக் கருதப்படுகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, இந்த அறிக்கை யின்படி நெசவாளர்களில் ஏதாவது தரம் பிரிக்கப்பட்டு இருக்கிறதா? இன்ன வேலை செய்கிறவர்கள், இன்ன தரம், இன்ன கூலி என்று கூலி நிர்ணயம் செய்து இருக்கிறார்களா, அப்படி அளிக்கப்பட்ட கூலியை அவர்கள் பெறும் வகையில் கட்டாயப்படுத்தக்கூடிய திட்டம் இருக்கிறதா? அதை எப்படி நடைமுறைக்குக் கொண்டு வந்து நெசவாளர்களுக்கு வேண்டிய உதவிகளை, நெசவாளர்களின் துயர்துடைக்க அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்:- நெசவாளர்கள் மத்தியில் நிறையத்தரம் இருக்கிறது.

Ordinary variety, Reeds 18 to 20, Reeds, Shuttle 1-6, Pedal 2, two ply varieties, per pair of check varieties, casement, art silk × cotton mixture), art silk..............